# ஆதி மார்க்க னீதி மொழி

**December 2025**

*இதழ் 53 – டிசம்பர் மாதம் 2025 வெளியீடு*
*© AMNA Trust, Chennai*



### மூலமந்திரம்

முத்திபூர்ணம்!
மெய்யாக மெய்யாகவே சதுர்யுகங்ஙோடி கால மக்களிடத்திலும் உள்ள சர்வ மூலமந்திர நிரூபிக மகான்மியராகிய யுகவான் சாலை ஆண்டவர்களே முத்தி பாலிப்பு.

### பாத பூஜை

சுயம் பிரகாச னித்தியானந்த பிரம்ம சொரூபத்தினை அறியாது அஞ்ஞானமென்னும் திமிரத்தால் குருடாயிருந்த எங்களுடைய கண்களை ஞானமென்னும் அஞ்ஞன சலாகையால் திறந்த தேசிகேந்திரரே தேவரீருடைய திவ்ய திருவடிக் கமலங்ஙளுக்கே னமஸ்காரம்.

### மகாசங்ஙல்ப மந்திரம்

மறலி என்கிற எமனுடைய அவமான அவஸ்தை வந்து தீண்டும் அடையாளம், கசப்பு தீட்டு பிணனாற்ற ஜலம் வெளியாகி யுகங் ஙோடிகால னரக வேதனைக்குப் போகாமல் அதைமாற்றி, பரமபத னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றவே சதுர்யுகத்திலும் உண்டான எல்லா ஜாதி மத வேதங்களும் வந்திருக்க அந்த அகமிய மகா அதிவல்லப தெய்வீக பிரம்மவித்தைச் செயலானது மானெடுங்ஙாலங்ஙளாக மக்கள் புழக்கத்தில் இல்லாது இந்த உலகத்தை விட்டு மறந்து மறைந்நே போய்விட்ட இறுதிக்காலமாகிய இதுனேரம் எமபயத்தைக் கடத்தி மீண்டும் அதே பிரம்மவித்தைச் செயலாகிய சுவர்கப்பதி பரமபத முத்திச் செயலினில் ஏற்றி வைக்கும் கல்கி மகதி என்னும் மூக்குக்கு வெளியே மூச்சு ஓடாத தவமுடைய ஊண் உறக்கமற்ற எங்ஙள் குலதெய்வம் மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் மெய்மதத்தில் னாங்ஙள் சேர்ந்து ஆகிக்கொண்டிருக்கின்றோம்!

எதார்த்த னன்மனத்தினர் யாராக இருந்தாலும் இதில் சேர்ந்து தேவப்பிறப்பிலே பிறந்து ஆகிக்கொள்வதற்கு ஆண்டவர்களுடைய ஆசீர்பாதம்!



Copyright © AMNA Trust, Chennai

# குருபிரான் அவர்களின் முன்னுரை



ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே! எதார்த்த நன்மன சற்சன மக்களே !

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் ஆசீர்பாதத்துடன் ஆதி மார்க்க னீதி அவையின் ஆதி மார்க்க னீதிமொழி மின்னணு சஞ்சிகை 53 ஆவது முறையாக இதழ் விரித்து 14 அவை மற்றும் 3 இசை வகுப்பு நிகழ்வுடன் நவம்பர் மாத மலராக நறு மணம் கமழ மலர்ந்து உங்கள் கைகளில் தவழ்கிறது.

மரணமில்லா பெருவாழ்விற்கான இவ் வழி காட்டும் சஞ்சிகையின் உயர் நோக்கம் யாதெனில் பழகித் தேற வேண்டிய சாகாக் கல்வியைப் பற்றி அறிந்து பழகுவதற்கே. சாகாக் கல்வியின் சர்வ லட்சணமும் சர்வ சிறப்புடன் 18 அத்தியாயம், 18 யோகங்களாக, பகவத் கீதையும், மற்றும் பதினெண் புராணங்களும் பகர்கின்றன.

ஆதியிலே வந்த பரமகுரு முருகப் பெருமானும், அவரின் பரம்பரையாக வந்த திருமூலர் பிரானும், வடலூர் வள்ளல் பிரானும், சாலை ஆண்டவர்களும், சாகாக்கலையின் மூலமாகப் பழகித் தேற வேண்டிய ஒன்றே சாகா கல்வி என அருளி உள்ளார்கள். வாழும் கலையாக வந்த வல்லவரிடம் பழகி வந்த மக்களே சாகாக் கல்வியை அறிவர். இவ் வாழும் கலையின் வல்லபச் சிறப்பே நாளெலாம் நலம் தரும் நன்மையுடன் நடந்து வரும் நமது அவை நிகழ்வுகளாக பரிசுத்த ஆவித் தெய்வத்தின் பெரும் திருவடி கிருபை ஆசீர் பாதத்துடன் சத்தியப் பிரமாணமாக நிறைவேறி வருகிறது. இப்படியான சர்வ நிலைகளும் பொதியப் பெற்ற இம் மின்னணு சஞ்சிகையை நன்மக்கள் யாவரும் பார்த்து, படித்து, பதியாக வரும் மதியின் அதிபதியை அவசியம் தேடி அடைந்து மரணமிலாப் பெருவாழ்வு வாழ வேண்டும் என பரிசுத்த ஆவித் தெய்வத்தின் திருவடி போற்றி வணங்கி வாழ்த்துகிறேன்.

நமஸ்காரம்.

*சாலை ரவி*

**நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai 

*எம்மிடத்திலிருந்து வாக்கியங்ஙள் வெளியாகும்போது எம் அங்ஙக் குலங்ஙள் எவ்வளவு ஆத்திரங்ஙொண்டு அசைவுகள் பிறங்ங இருக்கின்றனவோ அதில் கால் பங்ஙாவது உன் அங்ங குலங்ஙளில் இந்ந மெய்யைப் பற்றிப் பேசும்போதும் கேட்கும்போதும் ஆத்திர அசைவு பிறங்ங னிற்கவேண்டும். அதுதான் ரக்ஷிப்புக்குரிய வழி.*

*அந்ந வாடாத அழியாத யவ்வன தேகத்தின் பொலிவை இந்ந அழிந்நு போகிற தேகத்தின்மேல் பாய்ச்சி, இதையும் அழியாத் தூலம் ஆக்கும் செயலே, பிருக்த யோகம். தேகமுத்தி என்பதுவும் இதுவே.*

*~ சாலை ஆண்டவர்கள்*



Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2025 நவம்பர் மாதம் அவை நிகழ்வுகள் – 2025 டிசம்பர் மாதம் வெளியீடு

### 01-11-2025 ~ சனிக்கிழமை அவை ~ காஞ்சிபுரம்
### தொகுப்பு: ஸ்ரீமதி. கவிதா வெங்கட்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **அறுபுரினூல் பிரானிலை அறியான்...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.



**குருபிரான் அருளமுதம்:**
தாமரையில் இருந்து தோன்றியவனே பத்மன். ஒரு மொழி கீதை எனும் ஓசை கொண்ட நடனத்தால் பிறவிப் பிணி தீர்க்கும் இடமே ஆதி மார்க்க னீதி அவை.

*ஜீவசகோதரர் கௌதம்:* சுயம் பிரகாசமான பிரம்மத்தை அறிந்தோரே பிராமணர். காட்டும் குருவின் துணை கொண்டு காண்பதே இறை தரிசனம்.

**கோடாயிதக்கூர் வாக்கியம் 223 தொடர்ச்சி :** கற்பாந்த கோடி கால வாழ்கைக்கு வேண்டிய துணையைத் தேடிக் கொள்வதே அறிவின் அடையாளம். நித்திய வாழ்வுக்கு அதிகம் பாடுபட வேண்டும். அழிவற்ற நித்திய வளமையான வாழ்விற்கு உரியதே மனித ஜென்மம்.

*ஜீவசகோதரர் சிரஞ்சீவி:* அலையும் மனதை அலைவறச் செய்வதே அசுர சம்ஹாரம். வாடகை வீடாகிய நமது தேகத்தில் மனம் அலையும் செயலே குடும்ப கோரம் என்கிறார் வள்ளலார். குருவின் மெய் அன்பால் அகத்தில் நாம் குடியேறும் பொன் உடம்பே நித்திய வீடு.

*ஜீவசகோதரர் குமார்:* **வேதாகமம்: மத்தேயு அதிகாரம் 22 வாக்கியம் 42 to 45:**
பரிசுத்த ஆவியால் கன்னி மரியத்தின் கருவில் தோன்றியவர் இயேசு பிரான். துளசி மாடத்தில் உதித்தவர் ஆண்டாள் நாச்சியார். தாயுமிலி தந்தையிலி தான் தனியேன் ஆனேனடி என காணிக்கை நீதி மாணிக்கவாசகர் அவர்கள் அருளியுள்ளார்கள். தாயுமானவர், காகபுசுண்டர், பதஞ்ஞலியார் யாவரும் கூறியது, தோன்றும் பொருள்களை படைத்த இறைவனின் இருப்பிடமே இருதயம்.

*ஜீவசகோதரர் மணிமாறன்:* எதார்த்த உள்ளம் கொண்ட மக்களின் பிறவிப் பிணி தீர நல் உள்ளம் கொண்ட நன்மக்கள் வழங்கிய நன்கொடையால் நாள் தோறும் வளர்ந்து வருவதே ஆதி மார்க்க னீதி அவையின் ஆலயம்.

*ஜீவசகோதரர் சங்கர்:* தலை காக்கும் தர்மச் செயல் செய்பவரே குருபிரான். குரு கீதை கூறும் குருவின் விருப்பமே சொர்க்கம். அதற்கு இணங்கி நடப்போர் யாவரும் நித்திய வாழ்வு வாழ்வது நிச்சயம்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai 

## 02-11-2025 ~ ஞாயிற்றுக்கிழமை அவை ~ சிவகாசி
## தொகுப்பு: ஸ்ரீ. தியாகராஜன்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **அரியானை அறியவைத்து…** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.

ஜீவசகோதரி மணிமொழி: குருவின் ஓசை கொண்ட நடனமே மனுவின் அறியாமை அகற்றி தன்னை அறியும் அறிவைத் தருகிறது. என்றும் பத்து வயது கன்னியாக விளங்கும் ஜீவனின் ரகசியம் குருவின் அருளால் நமது மூன்றாவது கண் திறக்கப் பெற்றே அறிய முடியும்.

*ஜீவசகோதரர் யுவராஜ்:* ஆதி மார்க்க னீதி அவையின் செயல், அறிவை அறிய வைத்து நம் பிறவிப்பிணி தீர ஜீவ கங்கையில் நீராடச் செய்வதே. பழகித் தேற வேண்டிய செயலே ஞானமாகும்.

*ஜீவசகோதரர் கேசவன்:* குருபிரான் அருளும் இடத்தில் குடியேறிச் சொல்வதே மூல மந்திரம். அசைவற்ற மனம் கொண்டு அகத்தில் இருக்கும் இறைவனை அறியும் செயலே பிரம்மவித்தை.

*ஜீவசகோதரர் நாகலிங்கம்:* அறிவு மாணிக்கம் இருக்கும் வரையே இந்த உலகம் நமது சொந்தம் என அறிவதே விழிப்புணர்வு. மவுன மணியான மனதுள் இருக்கும் அறிவை அறிய குருவின் அருளால் கவனமுடன் செயலாற்ற வேண்டும்.

*ஜீவசகோதரர் பார்த்திபன்:* அறியாமையில் உழலும் நம்மை திருத்தி தவத்தில் நிறுத்துவது குருபிரானின் வாய்மையே. அறிவு வடிவாக வரும் ஆசானின் மனோ நோக்கிற்கு இணங்கி நடப்பதே யோகம்.

**குருபிரான் அருளமுதம்:**

பிறர் மதிக்க வேண்டும் என நினைப்பதே சிறுமை. எக்காலமும் மாறாத மெய்யை நம்மிடம் செயலாக்கி வைக்கும் இடமே ஆதி மார்க்க னீதி அவையாகும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 06-11-2025 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **துறந்த மனத் தனியோகர் உளத்திற் பூக்கும்…** என்ற பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**

பார்க்கும் இடமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் ஏக பராபர விராட்பதி பிரம்மத்தை தன்னுள் உணர்ந்து வாழ்பவர்களே மெய் ஞானிகள். சாகும் திறமாகிய சாஸ்திரத்தை கற்றுத் தேர்ந்து ஞான சூரியனாக பிரகாசிக்கும் குருநாதரின் திருநாவினின்று சுரக்கின்ற தெவிட்டாத தெள்ளமுத மொழியே நம் செவிகளில் தேனாறாகப் பாயும் பாரமார்த்தீக ஞானமாகும்.

**திருமெய்ஞ்ஞானக் கொரல் : திருவாக்கியம் எண் : 9** ஆசான் அருளால் உயிருடன் உள்ள போது அறிந்து அடையும் பெரும் பதவியே மோட்ச சாம்ராஜ்யம். சிற்றின்பம் அனுபவிக்கும் தூல உடல் கடந்து அதனுள் பொதிந்திருக்கும் ஆனந்த உடல் கொண்டே பேரின்பம் அனுபவிக்க முடியும். மாறாக ஓடுகின்ற மனதை மரண பய சவுக்கினால் மாற்றி வைத்து அறம், பொருள், இன்பம், வீடுபேறு அளிப்பவரே அறவாழி அந்தணர்.



Copyright © AMNA Trust, Chennai 

**அறிவு அறி பாடம் - குருபிரான் அருளமுதம்:**

ஆயிரத்தெண் இதழுடன் அறிவு மணம் கமழும் மலரின் இருப்பிடமே சாகாத் தலை. இதன் ரகசியம் உணர்த்துவதே சாலை ஆண்டவர்கள் அருளிய அறிவு அறி பாடமாகும். குரு அருளால் எண்ணாகிய அகரமும், எழுத்தாகிய உகரமும் சேர்ந்த மூன்றாவது கண் திறப்பிக்கப் பெற்றவர்களே கண்ணும் காதும் நேர் பெற்ற மக்களாவர். தகமை பெற்ற தக்கோர் செயலே ஞான வழி. அவ் வழி மூலமே இறைவனின் சர்வ படைப்புகளான மலை, கடல், அருவி, ஆறு, விண் மண், பாதாள உலகும் இயற்கை உண்மை கடவுளாக மனித வடிவினுள் அணுவில் அணுவாக பொதிந்துள்ள தேவ ரகசியத்தை உணர முடியும். குருவினிடம் சீடன் பெறும் சிவபோகமே அவனது அறிவு மாணிக்கத்தை ஒளிரச் செய்கிறது. அவ் ஒளியில் பயணிப்பதே பிறவாமைக்கான நன்னேர் வழியாகும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 08-11-2025 ~ சனிக்கிழமை அவை ~ காஞ்சிபுரம்
## தொகுப்பு: ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி

பரிசுத்த ஆவித் தெய்வம் பரம்பொருள் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **அயினெனும் பொருப்பி னங்ஙனோர் கூற்றும்...** எனும் ஸ்தோத்திர பாடலுடன் அவை இனிதே உதயமானது.

**குருபிரான் அருளமுதம்:**

அவரவருள் தலையான தலையாக விளங்கும் கர்த்தாதி கர்த்தரை காட்டும் குருவே சர்வேஸ்வரன். மறுபிறப்பு பூமியில் அருளப் பெறுவதே மரணமிலாப் பெருவாழ்வு. மனம் நபுஸிலிருந்து சிபத்துக்கு மாறும் செயலே நரி பரியாகுவதாம். ஆசானின் சொல்லக விளக்கெனும் ஜோதியால் காண்பதே அகரப் பொருளாகும். அருவத்தில் இருக்கும் இறைவனை உருவத்தில் காணச் செய்வதே குருவின் திரு உருவாகும். ஒரு மொழி கீதையால் 18 அத்யாயம் கொண்ட பகவத் கீதை செயலாகும் இடமே ஆதி மார்க்க னீதி அவை.

**கோடாயிதக்கூர் வாக்கியம் : 224 - குருபிரான் அருளமுதம்:**

அறிவு இருக்கும் தலம் அறிந்து வாழ மனிதனுக்கு தரப் பெற்றதே ஆறாம் அறிவு. ஒலிவா மலை தனது தனிப் பெருங்கருணையால் அருள்வதே அருட்பெருஞ்ஜோதி.

*ஜீவசகோதரர் கௌதம்:* அறியாமையே அஃறிணை, அறிவே உயர்திணை. மரண வறுமை தீர்க்க குருபிரான் அருளும் மாமருந்தை அருந்தி வாழ்வதே சன்மார்க்க வாழ்வு.

*ஜீவசகோதரர் சங்கர்:* முக்குணம் நீங்கிய நிர்க்குண நிலையே அடக்கமாகும். மும்மூலம் தீர்த்தவரின் வாளாயுதமே நம் மும்மலம் நீக்கும் வல்லபம் கொண்டதாகும். பரிசுத்த ஆவியால் மறுபிறப்பு பெற்ற துவிஜனே மெய் உணர்வைப் பெறுகிறான். நற்றாளை அறிய வைக்கும் கல்வியைப் பழகித் தரும் செயலுள்ள இடமே ஆதி மார்க்க னீதி அவை.

பரிசுத்த ஆவி தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

*அஞ்ஞானமாகிய திமிரத்தால் குருடானவளும், விஷயத்தினாலிழுக்கப்பட்ட சித்தமுடையவளுமாகிய எனக்கு ஞானப் பிரபையைக் கொடுக்கும் தங்கள் திருவருள் பிரசாதத்தைச் சதா வழங்கும்படிப் பிரார்த்திக்கின்றேன்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

## 13-11-2025 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **மறையதில் மூமின் தேகம்...** எனும் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
ஆறாம் அறிவறிந்து அடக்கம் மடக்கிப் பிடிக்கத் தெரிய வைக்கும் நீதி வழியே மெய்வழி. நம் மூன்றாம் கண் திறந்து வைத்து இறப்பொழிக்கும் சன்மார்க்கம் அருளும் நாதமே எதார்த்த தேவகுருவின் அடையாளம். தன்னை அறிந்த பெரியோர்கள் துணையுடன் அவரவருள் ஐம்புலன் மூலம் அனுபவிக்கும் கர்த்தரை அறியும் போதே ஜாதி பேதமற்ற சமத்துவ நிலையை உணர முடியும்.

*ஜீவசகோதரர் சங்கர்:* இறை சன்னதங்கள் பெற்று வந்தவர்களே சன்னதப் பாரவான்கள். அறிவு இருக்கும் தலத்தில் நம்மை குடியேற்றி ஆவி வீணாகாமல் காக்கும் மெய்ச் செயலை பழக்கி உணர வைத்து அழியாத் தலையாக ஆக்கி வைப்பவரே மெய்யான குருபிரான்.

**திருமெய்ஞானக் கொரல் வாக்கியம் - 9 தொடர்ச்சி:** தன்னை அறிந்தவர்களே மூமீன். மூமீன் என்பதின் ரகசியம் அறியாத காபரின் மரணமே தீட்டு ஆகும்.

**குருபிரான் அருளமுதம்:**
பெரியோர்கள் அருள்வது நம்மிடம் செயலாகும் போதே நம்பிக்கை உண்டாகும். கலிமா எனும் பெரு முத்தைக் கண்டு தெரிசித்தவரே மூமீன். மண்ணாகிய தேகத்தின் மீது இச்சை வைப்பதே மாமிச இச்சை. உயிரை அறியும் ஆவிக்குரிய சிந்தனையே நித்திய ஜீவனும் சமாதானமுமாக உள்ளது. குருவருளால் ஜீவனை கண்டு தரிசிக்கும் மக்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள். நம்பிய தன்னுயிர் வீணாகாமல் சாவரு முன் சாகப் பழகும் சன்மார்க்க செயலே மெய்ஞ்ஞானம் ஆகும். புதிதாக மெய் ஞானத்திற்கு வருவோர் யாவரும் முன் காலந் தொட்டு நமக்கு முன் வந்த புராதன மக்களே. அறியாமையினுள் இருக்கும் அறிவை அறிய வைக்கும் குருவின் தயவே நம் பிறவிப் பிணி தீர்க்கும்.

பரிசுத்த ஆவி தெய்வத்தின் திருவடி போற்றி ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.

## 15-11-2025 ~ சனிக்கிழமை அவை ~ காஞ்சிபுரம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. புன்னகை மகேஷ்குமார்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **செல்வச் சீர் னபியை...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே உதயமானது.

**கோடாயிதக்கூர் வாக்கியம் - 224:** மெய்க் குருவின் துணையைத் தேடி நமது அனித்திய உடலுள் இருக்கும் னித்திய உடலில் குடியேறி வாழ்வதே நம் தலையாய கடமை. அப்படி தேடாதவன் அதோ கதி அடையும் அவகுண வேதாள மாபாதகன் என்கிறார் அருணகிரிநாதர்.

*ஜீவசகோதரர் கௌதம்:* பெரியோர்களின் அமுத மொழியே அருட்பெரும்ஜோதி எனும் யுகாந்த நாட்டு செல்வம். அசலை உணர்த்த வந்த நகல் வடிவே ஆலயங்கள் என அறிய வைப்பவரே ஆசான். சர்வ மதமும் கூறும் இருதயத்தில் இருக்கும் ஈசனை நமது மூன்றாவது கண் திறப்பித்து தரிசிக்கச் செய்பவரே மெய்க் குருபிரான். நரனை மனுவாக்கி, தேவராக்கி, ஜோதி என்ற மஹமூதாம் கன்னித்தாயை நம் அகத்தில் கண்டு தொழுது பிறவாமை பெற வேண்டும் என்ற உன்னத நோக்கமும் செயலும் கொண்டதே ஆதி மார்க்க னீதி அவை.

*ஜீவசகோதரர் கோபிநாத்:* தகவல் தொடர்பு துவங்கிய காலம் முதல் சமிக்கை, குறுஞ் செய்தி, ஒலி, ஒலியும் ஒளியும் என அறிவியல் வளர்ந்து தற்போது கைபேசி மூலம் உலகம் முழுதும்



Copyright © AMNA Trust, Chennai 

தொடர்பு கொண்டு, நினைத்த காரியத்தை சுலபமாக முடிக்க ஏதுவாக உள்ளது. அவரவர் பயன் படுத்தும் தன்மைக்கு ஏற்ப இது நன்மை தரவும், வாழ்வையே அழிக்கும் ஒன்றாகவும் இருப்பதால் மிகுந்த கவனமுடன் கையாள வேண்டியது மிக மிக அவசியமாகும்.

*ஜீவசகோதரர் விஜகுமார்:* **வேதாகமம்: யோவான் தீர்க்கதரிசனம்: அதிகாரம் 20: வாக்கியம் 12,26,29 : இறப்பின் மேல் வெற்றி** என்பது மூச்சும் பேச்சும் அற்று, காலமற்ற எல்லையில் தூங்காமல் தூங்கும் அரிதுயில் ஆகும். **கண்டு விசுவாசிப்பவனை விட காணாமல் விசுவாசிப்பவன் பாக்கியவான்** என்பது மெய்யான குருவைக் கண்டு அவர் அருளும் காணாத ஒன்றைக் கண்டு விசுவாசிப்பவனே பாக்கியவான். **உங்களுக்கு சமாதானம்** என்பது துவைத நிலை விட்டு அத்வைதமாக ஓர் அறிவாக வாழ்வதாம். அப்படியான சமாதானம் பெறுகின்ற செயலுள்ள இடமே ஆதி மார்க்க னீதி அவை.

பரிசுத்த ஆவி தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 16-11-2025 ~ ஞாயிற்றுக்கிழமை அவை ~ சிவகாசி
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமலதா தியாகராஜன்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **பற்றிய பற்றாய்ப் பரந்துல கெங்ஙும்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.

*ஜீவசகோதரி கவி:* மொழியின் இலக்கணமே அதன் நெறியாகும். இறைவன் படைத்த நால்வகை யோனி, எழு வகை தோற்றம் யாவும் நெறிப்படியே உள்ளன. எதார்த்த ஓர் தேவ குருவின் தயவுடன் தன் எனும் ஜீவகுகையில் இருக்கும் கன்சுல் என்பதை தன்னில் அறிந்து சிவன் எனும் வாடாத தீபத்தை அகமியத்தில் அறிவதே மனுவின் தலையாய கடமையாம்.

*ஜீவசகோதரி வசந்தி:* மெய் ஆசான் அவர்களே மெய் கல்வியால் மும்மலம் சூழ்ந்த நம் மனதை அறிவாக மாற்றி உணர்வெனும் கம்பத்தில் பிராணக் கயிறு கொண்டு அறிவு ஜோதியான ஞானக் கொடி ஏற்றி அகத்தில் உள்ள நம் சொந்த தேகத்தில் குடியேற்றி வைக்கிறார்கள்.

*ஜீவசகோதரி பாரதிபார்த்திபன்:* ஞானம் பெற தடையாக இருக்கும் மனம் எனும் மாயையை விலக்கி அனித்திய குடிலாகிய நம் தேகம் விட்டு நித்திய சொந்த வீட்டில் குடியேற்றி வைப்பவரே ஆசான். அவர் காட்டும் **காட்டகத் தேறி னாட்டுனன் னாட்டம் வீடுகண் டெடுக்கப் பாடுனற் பயனே** என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். நம்மை ஆட்கொண்ட குருவின் திருவாக்கில் நம்பிக்கை வைத்து நடப்பதே யோகமாகும்.

*ஜீவசகோதரர் கோபாலகிருஷ்ணன்:* குருபிரான் காட்டும் அகமிய வழியே ஆகம விதிகள். கோபுர வாசலாகிய வள்ளலின் வாயினுள் நுழைந்து நினைவு ஓர்மையாகி நடராஜ நடனம் மூலம் ஆகாயத்தில் ஒலி ஒளியாக உள்ள இறைவனை அறிவதே சிதம்பர ரகசியம். சிரசின் நவதுவாரமும் அங்கு படைப்பு உண்டாக்கும் மனதையும் அறுசுவை ஒளியும் இடத்தையும் அறிய ஆசான் தயவு வேண்டும்.

*ஜீவசகோதரர் காளிராஜன்:* உடல் ஓர் அனித்தியம் என அறிவாக வரும் ஆசான் முன் செல்லும் போதே அறிகிறோம். சத்தியமும் ஜீவனும் வழியுமாக இருக்கும் நான் எனும் ஜீவனான ஆறாம் அறிவை ஆசான் அருளால் அறிந்து நம்மை அடக்கி ஆளும் மனதை நாம் அடக்கி ஆள்வதே அடக்கமாகும்.

*ஜீவசகோதரர் வெங்கடேசமுத்து:* விபூதியின் மூன்று கோடுகள் உணர்த்தும் முக்குணமும் அதன் மூர்த்தியரையும், சொற்குணா உற்பன நிர்குணராம் சாலை ஆண்டவர்கள் **முப்ப திப்படி முக்குணத் திற்குடி** என அருளியுள்ளார்கள்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai 

## 20-11-2025 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **தாகமும் தணியான் தன்னுயிரறியா...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.

**குருபிரான் அருளமுதம்:**
ஆன்ம ரகசியம் அறிவதே ஆன்மீகம். படைப்பு உண்டாக்கிய படைத்தவனை உணர்வதே ஞானத்தின் முதல் படியாகும். அண்ட பிரம்மாண்டம் காட்டும் அணுவில் அணுவான விஸ்வத்தை தேசிகர் வாசகமாகிய தீர்த்தம் பருகிக் கண்டு தீர்வதே பிறவித் தாகம்.

**திருமெய்ஞ்ஞானக் கொரல் - திருவாக்கியம் எண்: 9** விதியாகிய இறப்பு வருமுன் மனுவாகப் பிறந்த யாவரும் அறிவறிந்த பெரியோரைத் தேடி அடைய வேண்டியது பெரும் கடமையாகும். காலாதீதனாக வரும் சிவச் செம்மல்களே பேரிரக்கம் கொண்டு காலன் அணுகாமல் நம்மை இரட்சிக்கிறார்கள்.

**அறிவு அறி பாடம் - குருபிரான் அருளமுதம்:**
அற்றம் காக்கும் அறிவை அறிவதே மனிதப் பிறவியின் நோக்கமென உணர்த்தும் உன்னத பாடமே அறிவு அறி பாடம். அரக்கர், வானவர், மனு, மூவரும் தேடிக் காணா அடி முடி னடுவின் இரகசியத்தை குரு பாதத்தில் சரணாகதி அடைந்த அடிமைகளே அறிவர். மறுபிறப்பு எனும் உபநயனம் பெற்று, எண்ணம் பல கோடியாய் விரிந்து எம வாயிடம் செல்லாமல், நமசிவாய எனும் தேரைந்து மந்திரத்தை தன்னுள் உணர்ந்து தேவராக வாழ வேண்டும் என்பதே திருமறைகளின் தீர்ப்பாகும். நால் வகை யோனி, எழுவகை தோற்றமும் படைத்த இறைவனை பிரம்ம வித்தை செயலால் அகமியத்தில் அறிவதே மனித உடல் எடுத்த நன்னேர் வழியென, அறிவது முதலாம் அறிவு அறி பாடம் எனும் ஆதித் தலைப் பாடமாக சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 22-11-2025 ~ சனிக்கிழமை ~ காஞ்சிபுரம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. சண்முகப்ரியா செந்தில்

பரிசுத்த ஆவித் தெய்வம் மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **அறங்ங ளொருங்ங்ு திரண்டொரு வீடு...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.

**குருபிரான் அருளமுதம்:**
புலன் பொறியை அடிமையாக்கி நமது பொழுதை வீண் ஆக்குவதே கைபேசி. இறைவன் நம்மிடம் சக்தியும் புத்தியும் தந்தது இப் பிறவியிலேயே நம் நல்வினை தீவினை அறுக்க வல்ல ஆசானை தேடி அடைவதற்கே.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* மெய் அனுபவம் பெறவும் காலச் சக்கரத்தின் பிடியிலிருந்து நாம் தப்பவும் ஆசானின் தயவு வேண்டும். குருவாகிய இறைவன் நமது தேவை யாவற்றையும் அறிவார். ஞான சூரியனாக ஒவ்வொரு காலமும் வரும் ஞானிகளே நம் அக உலகம் விடியச் செய்கின்றனர்.

**கோடாயிதக்கூர் திருவாக்கியம் - 225 :** முடிவற்ற கால வாழ்வே நித்திய வாழ்வு. இந்த ஜென்மம் உள்ள போதே ஆசான் அருளால் அதை அடைய வேண்டும்.



Copyright © AMNA Trust, Chennai

*ஜீவசகோதரர் கௌதம்:* சர்வ வேதங்களும் கூறுவது ஆசான் அருளால் அறிவிருக்கும் தலம் அகமியத்தில் அறிந்து அதனுடன் இரண்டறக் கலக்கும் வீடடைதல் என்பதே. காலம் அற்ற எல்லையில் வாழ வந்தவனே மனு. உறக்க உலகம் கடந்த விழிப்புலகே காலம் அற்ற எல்லை. நான்கு யுகங்களையும் தன் கையில் கொண்டவரே காலாதீதன்.

*ஜீவசகோதரர் சிரஞ்சீவி:* தத்துவத்தில் சிறந்த மனிதனிடம் உள்ள அமானிதமே தத்துவாதீதம். நவ கிரகங்களால் ஆன நமது தத்துவத்தை நிக்கிரகம் செய்ய ஆசானின் அனுக்கிரகம் வேண்டும். இறைவன் படைத்த எழுவகை தோற்றமும் நம்மை அறிவதற்கே. ஞான ஆகாயப் பெரு வெளியே பிரம்மமான சிவம். படைப்பு உண்டாக்கும் மனமே வினையின் தலைவன். பிரபஞ்ச ஆற்றலை அறியும் மனுவாகிய நாம் வாசம் செய்யும் இடமே சுவாசமாகும்.

**அறிவு அறி பாடம் - குருபிரான் அருளமுதம்:**

அறிவை அறிய வேண்டியது மனுவின் பிரதான கடமையாகும். நினைப்பும் மறப்பும் உள்ள நிலைப்பிடம் அறிய நித்தியரின் அருள் வேண்டும். அவர் அருளால் நால்வகை யோனியும் எழுவகை தோற்றமும் தன்னிடம் அறியும் ஆற்றல் நரன் அல்லாத மனுவுக்கே உண்டு. விதைப்பவன் விதைத்தாலும் விழுந்த இடம் பொறுத்தே விதை விளையும். அடி முடி நடுவாக இருக்கும் பேராற்றல் கொண்ட அறிவே நமது முதலாகும். அண்ட பிண்டம் பஞ்சபூதம் பார் பொறி ஐந்து ஆறாதாரம் அறுசுவை இதன் ரகசியம் யாவும் இடம் எனும் அறிவாகிய ஆசானிடமே அறிய முடியும். மதி கதிர் உடுக்கள் நாள் கோள் மூவுலகம் இவற்றை ஐந்து கரமும் ஆன முகமும் ஆன குருவினிடமே அறிய முடியும். அறிவு இருக்கும் தலமான அவரவரின் நாமத்தை அறிய கவனமுடன் துரிய துரியாதீத நிலை கடக்க வேண்டும். ஆதி மூலமும் அதிசய சக்தியும் நமக்குள் இருக்கும் தந்தை தாயின் கடமையும் மறவாமல், தன்னை அறிதலே முந்தின கடமையாகும்.

பரிசுத்த ஆவி தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.

## 23-11-2025 ~ ஞாயிற்றுக்கிழமை அவை ~ சிவகாசி
## தொகுப்பு: ஸ்ரீ. ஜெய்குமார்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **பள்ளி யையுமெய்ப் பால்தந்த வள்ளலை...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே உதயமானது.

**குருபிரான் அருளமுதம்:**

உள்ளதை உள்ளபடி ஏற்கும் எதார்த்த உள்ளம் உள்ளவர்க்கே மெய்ஞ்ஞானம் வாய்க்கும். பார்க்கவும் கேட்கவும் பேசவும் நுகரவும் செய்யும் பொருளை அறிவதுவே தன்னை அறியும் ஞானம். இடுக்கண் களையும் நட்பான பொருளே நம் ஜீவன். பதஞ்சலி முனிவர் அருளிய அஷ்டாங்க யோகம் படிப்பதன்றி பழகுவதாகும். இல்லாததை இருப்பதாக நம்பும் அறியாமையை விட்டு உள்ளதை உள்ளபடி ஏற்பதே அறிவு. வாக்கு வல்லபமான நமது அடையாளமே இறைவனின் சாயல். இறை தீர்ப்பின் படி நாம் சொர்க்கம் நரகம் புகுவதே தீர்ப்பு நாள். நமது உடலின் பிரதானமான தலையை காக்கும் பொருளே சிரம். மூன்றாவது கண்ணாகிய இருதயத்தில் விளங்கும் இறைவனை மானிடச் சட்டை உள்ள போதே அறிய வேண்டும். நெருப்பு, ஆவிடை, பீடம் - பிரம்மா, விஷ்ணு, சிவன் - உருவம், அருவம், அருவுருவம் என்ற மூன்று தத்துவ வடிவாக இருப்பதே சிவலிங்கம். பெருமாளின் நின்ற அமர்ந்த சயன கோலமும் இது போன்ற ஒன்றேயாகும். நான்மறை கடந்து விளங்கும் இந்த ரகசியங்கள் நம் அகத்தில் இருப்பதை அறிய ஆசான் அருளும் தயவும் வேண்டும். தாய் தந்தை சேயாக இருந்து நம்மை காக்கும் ஜீவனாகிய சிவலிங்கத்தை சாலை ஆண்டவர்கள் **தாயளித் திட்ட செல்வம் தந்நைய ரளித்த செல்வம் சேயளித் திட்ட செல்வம்** என அருளியுள்ளார்கள். **மன்மனம் எங்குண்டு வாயுவும் அங்குண்டு** என திருமூலர் அருளியுள்ள படி மன்மனத்தை அறிந்தவர்களே தேவர்கள். அதை அறிய வைக்கும் இடமே ஆதி மார்க்க னீதி அவை.

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய  ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai

## 27-11-2025 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **மெய்ம்மறை யோத லாலே மேன்மையாம்...** எனும் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
இறுதி நாள் எனும் கால ரகசியத்தை அருள்பவரே இறுதி னபி, இறுதித் தீர்ப்பர். நித்திய ஆனந்த சுயம் பிரகாசப் பொருளை அவரவருள் தரிசிப்பதே ஜோதி தரிசனம். சாகும் திறம் அறிவிக்கும் சாஸ்திரத்தை அறியும் அருகதை உள்ளவனே மனு.

**திருமெய்ஞானக் கொரல்: வாக்கியம் - 9 தொடர்ச்சி - குருபிரான் அருளமுதம்:**
வந்த வேதமாகிய ஆசான் அருளால் எழுதாத எழுத்தை வாய் மூடி ஓதும் செயலே மெய்க்கல்வி. ஒரு மொழி கீதையால் குரு அருளும் பகவத் கீதை கூறும் 18 யோக நிலைகளும் நம் கூட்டினில் நிஜமாகுவதே அச்சமற்ற ஆனந்த வாழ்வு.

*ஜீவசகோதரர் குமார்:* குருவின் திருவடி நிழலில் தஞ்சம் அடைந்தே வஞ்சப்புலனை வெல்ல முடியும். காலனை வெல்லச் செய்யும் குரு மொழியாம் மெய்ப்பாலை அறிவதே நமது வயதின் பிரயோஜனம். ஆசான் அருளும் செவி உணவில் வளர்வதே ஜீவக்குழந்தை.

*ஜீவசகோதரி பானுமதி:* **திருக்குரான் - அத்தியாயம் 28 அல்கஸஸ்:** வேத சான்றுகள் யாவும் ஜீவன் குறித்தே கர்த்தர்கள் அருளியதாகும். குதாவாகிய குருவின் துணையால் ரூஹாகிய ஜீவனை அறிவதே தன்னை அறிதல். இரவு பகலற்ற இடமே நூர் ஒளியாக தன் மயமாக விளங்கும் தஜல்லியம். தன் உலகமாகிய அக உலகம் விடிவதே பஜர் ஆகும்.

**அறிவு அறி பாடம் - குருபிரான் அருளமுதம்:**
எதற்கும் முதலான அறிவை அறிவதே முதற் பாடம். ஆதிக்கு முன் ஆதியான அனாதியே பிரகாசப் பொருளாக ஆதிமூலமான அதிசய சக்தியாக சகல உயிர் ஜீவனிலும் ஆடும் பாதமாக இலங்குகிறது. மும்முதலான ஆதியை அறிகின்ற அறிவை அறிய குருவின் துணை வேண்டும். எங்கும் ஊடுருவிப் பாயும் சத்தாகிய தீயே பத்து வயது கன்னித்தாய், அறிவு வடிவான தந்தையை அறியும் முதற் கடமையே தன்னையறிதல். யுகந்தோறும் வரும் அவதார புருஷர்களின் அறிவின் உச்சத்தை அறியும் போதே அவதாரத்தின் மகிமையை உணர முடியும்.

பரிசுத்த ஆவி தெய்வத்தின் திருவடி போற்றி ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.

## 29-11-2025 ~ சனிக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## மெய்வழி குழந்தைசாமி கவுண்டர் ஐயா அவர்களின் அவதார திருநாள்
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

பிரம்ம பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **அடங்கலொடுங்கு மிடம்பட னின்ற...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிகழ்வுகள் இனிதே உதயமானது.

**குருபிரான் அருளமுதம்:**
மூல மந்திரமே நம்மை காக்கும் ஆரமான வேல், வச்சிர ஆயுதமாகும். ஈறாறு குருமாரிடம் முரீது பெற்றும் பலனின்றி பின்னர் தனிகையரின் திருவடி நிழல் படிந்து மெய்யைப் பெற்ற சாலை ஆண்டவர்கள் 1945ல் தாரிபுல் அனந்தர் மூலமாக வந்த குழந்தைசாமி கவுண்டரையும் மெய் குண்டம் எனும் மெய்வழிச் சாலையில் தன்மயம் ஆக்கினார்கள். அங்கனம் கடவுள் நிலை அறிந்து அம் மயமாகிய குழந்தைசாமி கவுண்டர் அவர்களே ஐவழி விளைவுக்கு அப்பால் உள்ள மெய்வழியை ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள் அறிவதற்கான ஆதாரமாக விளங்குகிறார்கள்.



Copyright © AMNA Trust, Chennai 



சுவாமி மலையில் சிவனாருக்கு உபதேசம் செய்த முருகப் பெருமானே குழந்தைசாமி. தன் தாயாகிய பத்து வயது கன்னியை சிவனாருக்கு மணம் முடித்து வைத்த அவரே தகப்பன் சுவாமி. பெரியோர்கள் நம் தலையில் ஏற்றிய ஞான தீபத்தை எண்ணற்ற தீபமாக மக்கள் தலையில் ஏற்ற ஒழுக்கம் மகா முக்கியமாகும். கலைக்கோட்டு மாமுனிவரின் சீடரான நபிகள் நாயகத்திடம் ஞானம் பெற்றவர்கள் அபூபக்கர், உதுமான், அலியார், உமர், உபைதா ஆவர். குருநானக் அவர்களிடம் ஞானம் பெற்று **ஓம் தத்சத் ஹலால்** என்ற மகாவாக்கியம் அருளிய ஒரே சீடரே மர்தானா. காலை 7 மணிக்கு ஓதும் மகா சங்கல்ப மந்திரம் அமானிதத்தின் ரகசியமாகும். சேதி அடையாளமான நாமம் புள்ளியை நாம் தரிசிப்பதே விஸ்வரூப தரிசனம். எங்கும் நிறைந்த இறை பொருளே ஐவணத் தளிராக ஐம்புலனிலும் நின்று விளங்குகிறது. வருங்கால மக்களுக்கான விடிவெள்ளியே ஆதி மார்க்க னீதி அவையின் மின்னணு சஞ்சிகை. நாம் யார் என்பதையும் எப்படி வாழ வேண்டும் என 18 படிநிலைகளாக பகவான் அருளியதே பகவத் கீதை. கடை நிலை ஊழியராக விளங்கும் நம் அவைத் தலைவரின் பிறந்த நாளும் இந்நாளில் அமைந்தது சிறப்புக்குரிய ஒன்றாகும். சாலை ஆண்டவர்கள் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.

## 29-11-2025 ~ சனிக்கிழமை ~ காஞ்சிபுரம்
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் பொற்பாதம் போற்றி சிவானந்த போதம் பாடலுடன் அவை உதயமானது.

*ஜீவசகோதரர் கௌதம்:* ஆன்மா லயமாகும் இடமாக ஊன் உடம்பினுள் இருப்பதே ஆலயம். பொய் மெய்யும் பிரித்துக் காட்டும் உயர்ந்த தத்துவமான மனித தூலமே வேதமாகும். கடவுள் செயல் அறியாத நரனே மீண்டும் கருவாசலில் புகுகிறான். தன் பெருவழியான சாலை வாழ்வே அறிவு வழியாகும்.

**கோடாயிதக்கூர் வாக்கியம் 226:** மாணிக்கக் கல்லும் மலைக்கல்லும் போன்றே மெய்யைப் பெற்றவனும் பெறாதவனும் உள்ளனர். எதையும் தன் மயமாக்கும் நெருப்பு போல் குருவின் வாய்மையில் கலந்து நித்திய அறிவைப் பெற்று வாழும் காலத்தில் அனுபவிப்பதே சொர்க்கம்.

*ஜீவசகோதரர் கோபிநாத்:* செல்போன் பற்றிய விழிப்புணர்வை மக்கள் அறிவதுடன் தங்கள் குழந்தைகளும் அறியும்படி செய்ய வேண்டும். அதில் தேவையற்ற செயலிகளை நீக்கி குறிப்பிட்ட நேரம் பயன் படுத்தி நன்மை தரும் செய்திகளை மட்டும் கிரகிப்பதே ஆரோக்கியமான மனதிற்கு வழியாகும்.

*ஜீவசகோதரர் குமார்:* **வேதாகமம் – தெசலோனிக்கேயர் : 2 அதிகாரம் : 2 வாக்கியம் 13, யோவான் : 1 அதிகாரம் : 4 வாக்கியம்: 4,5,6** நம் முகத்தின் ஊனக் கண் அகற்றி ஞானக் கண் அறிய வைப்பது பரிசுத்த ஆவியாக வரும் கர்த்தரின் நாதமே. அவரின் ஆசீர்பாதம் பெற்றவரே வினை தீர்ந்து தேவனை வணங்கும் பாக்கியமுடன் தன்னுள் துப்புரவாக துலக்கும் ஆசானையும் அறிவர். மனதின் புலன்வழி செல்லாது அறிவு வழி செல்வோரே ஆணவம் நீங்கி தெளிந்த அறிவுடன் வாழ்வர்.

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai 

## 30-11-2025 ~ ஞாயிற்றுக்கிழமை அவை ~ சிவகாசி
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

பிரம்மோதய மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **பரமனே உருவெடுத்து...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.

*ஜீவசகோதரர் திருமுருகன்:* தோற்றம் உண்டாக்கும் பொருளை நம்மிடம் அறிவதே தன்னை அறிதல். மனுவின் கடமை மன அலைவற்று ஜீவனைக் காத்து சிவம் ஆக்குவதே. குரு அருளும் செவிச் செல்வமே ஆறாம் அறிவை அறிந்து ஏழாம் பிறப்பு எடுத்து எமன் எல்லையில் நம்மைக் காக்கும் ஆயுதமாகும்.

*ஜீவசகோதரி ஜெயலட்சுமி:* அறியாமையை அகற்றும் இடமே ஆதி மார்க்க னீதி அவை. அவரவருள் இருக்கும் அர்த்த நாரியே அகரப் பொருளாகும். இறை மூர்த்தங்களில் உள்ள பாம்பின் தத்துவமும், மூன்றாம் பிறை கண்டு தொழும் அகமிய ரகசியமும் அறியச் செய்வது ஆசானின் அருளே.

*ஜீவசகோதரி சரஸ்பதிமகேஷ்:* அஞ்சன சலாகை கொண்டு நம் அஞ்ஞானம் அகற்றி அறிவு தீபம் ஏற்றி வைப்பவரே குருபிரான். எதார்த்த உள்ளம் கொண்ட மக்களின் ஜீவ காரியம் எனும் ஒரே ஒரு செயலுக்கு வந்ததுவே ஆதி மார்க்க னீதி அவை.

*ஜீவசகோதரி பானுமதி குமரேசன்:* ஒரு மொழியாம் குரு மொழியால் அறிவதே சர்வ மத வேதங்களின் அடி நாதமான மறலி கை தீண்டாமை. குருவருளால் மனக்கண் திறந்து அந்தகரணக் கூட்டங்களின் ரகசியத்தை அறிந்தே உடம்பினுள் இருக்கும் உத்தமனைக் காண முடியும். ஆசான் அருளால் அத்வைத நிலை அடைவதே ஜென்ம சாபல்யம்.

*ஜீவசகோதரர் ஜெகநாதன்:* நமது மாயப் பிறப்பறுக்கும் மன்னவனாம் மெய் ஞானிகளின் அனுபவமே வேத வேதாந்தங்கள் யாவும். வேத வசனங்கள் நம்மிடம் செயலாகும் இடமே நாளும் கோளும் அற்ற இடம். நம் குற்றங்களை குணமாக்கிக் கொள்பவரே மெய் ஆசான்.

*ஜீவசகோதரர் குமரேசன்:* அலீபு-லாம்-மீம் எனும் முப்பொருள் கோலமும், நடமாடு ஜீவாத்மா எதார்த்த பரமாத்மா எனும் இரு பொருள் கோலமும், கன்சுல் மகபியத் எனும் ஒரு பொருள் கோல விளக்கமும் அறிய ஆசான் தயவு வேண்டும். உயிரின் மேலான ஒழுக்கமே பிறவாமை பெறுவதற்கான ஒரே வழியாகும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.

*எவரது பிரகாசத்தினால் 'யானே எல்லாம், என்னிடத்திற்குள்ளே யாவும் உள்ளன' என்றிவ்வாறு சத்தாகிய ஆத்ம வடிவமானது அறிவிக்கப் பெறுகிறதோ, அவரது பாத தாமரையைத் தினமும் பணிகின்றேன்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai

**இசை வகுப்பு**
**தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்**

**02-11-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ நாயகன் இல்லம்**

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **எத்தியவிருணிக்கத்வித கடலே...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது. **பொன்னரங்கக் கொம்மி** பாடல் இரண்டு விதமான ராகத்துடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்றதும் பொன்னரங்கக் கொம்மியின் வரலாறும் அதில் புதைந்துள்ள பொருள் பற்றி குருபிரான் அருளியதும் அவை இனிதே நிறைவானது.

**16-11-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ நாயகன் இல்லம்**

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **வந்த வேதம் வரைந்த பயத்தினால்...** என்ற ஞான அகவல் பாடலுடன் அவை மலர்ந்தது **பத்தியத்திடம்** பாடலின் காப்புச் செய்யுளுடன் தொடர்ந்து அதன் பாடல்களும் பாடுவதற்கான பயிற்சி வழங்கப் பெற்று அவை இனிதே நிறைவானது.

**30-11-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ நாயகன் இல்லம்**

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **உபனிடதத் தெளிந்த ஒளி மலையின் பாதம்...** என்ற **ஆனந்தக்களிப்பு** பாடலின் காப்பு செய்யுள், **பத்தியத்திடம்** பாடலின் காப்பு செய்யுள், மற்றும் பாடல்கள் பாடுவதற்கான பயிற்சி வழங்கப் பெற்று அவை இனிதே நிறைவானது.

# குரு வா ஆழ்க! குருவே துணை!

*ஸ்ம்ஸார துக்கத்தை னிவர்த்திக்கும் இக் குரு கீதையை, தேவி! குரு தீக்ஷை யில்லாதவன் முன் ஒரு பொழுதும் படிக்கலாகாது.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai		December 2025

## 2025 - நவம்பர் மாதம் நடைபெற்ற அவை நிகழ்வுகள்


### 09-11-2025 ~ ஞாயிற்றுக்கிழமை

நமது குருபிரான் திரு. சாலை ரவி அப்பா திருவுளப்படி விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் வட்டம் ஏவளூர் கீழ்க்காரணை கிராமம் மாரியம்மன் கோவில் ரோடு அருகில் உள்ள சரவண நந்தவன வளாகத்தில் ஆதி மார்க்க நீதி அவையின் ஆலயம் அடிக்கல் நாட்டும் விழா நடைபெற்றது.



### 23-11-2025 ~ ஞாயிற்றுக்கிழமை

நமது குருபிரான் திரு. சாலை ரவி அப்பா அவர்களின் திரு முன்பாக ஜீவப்பிறவியர் **நேதாஜி - ஐஸ்வர்யா** அவர்களின் திருமணம் 23-11-2025 ஞாயிற்றுக்கிழமை சிவகாசி, திருத்தங்கல் ஸ்ரீ அருள்மிகு நின்ற நாராயண பெருமாள் கோவிலில் நடைபெற்றது.





Copyright © AMNA Trust, Chennai

**29-11-2025 ~ சனிக்கிழமை**

மெய்வழி குழந்தைசாமி கவுண்டர் ஐயா அவர்களின் அவதாரத் திருநாள் குருபிரான் திரு. சாலை ரவி அப்பா முன்னிலையில் சிறப்பு அவையாக சென்னையில் நடைபெற்றது.

## ஆதி மார்க்க னீதி அவையின் வருங்கால நிகழ்வுகள்

| நாள்/ இடம் | னிகழ்வுகள் |
|---|---|
| **04-01-2026 / சென்னை ஞாயிற்றுக்கிழமை** | குருபிரான் திரு. சாலை ரவி அப்பா திரு முன்பாக புது ஆண்டு நிகழ்வை முன்னிட்டு சிறப்பு அவை சென்னையில் நடைபெற இருக்கிறது. |



Copyright © AMNA Trust, Chennai

**குருபிரான் தங்களின் திரு நோக்கினின்றும் நோக்கிய பிரகாரம் ஆதி மார்க்க னீதி அவையின், 2025 நவம்பர் மாதம் குருபாதம் போற்றி நல்லுணர்வுடன் நல்லுள்ளம் கொண்டு நன்கொடை வழங்கிய நன்மக்களின் எண்ணிக்கை - 69**

**அனைவருக்கும் நன்றி !!!**

**AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்க ஆர்வம் உள்ளவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.**

**Account Name: Aathi Margha Neethi Avai**
**Account Number: 50200047470073**
**IFSC: HDFC0000323**
**Branch: Mylapore**



Copyright © AMNA Trust, Chennai 

All Rights Reserved

***Published by:***
***AMNA TRUST (Registration No. 163/2019)***
***13/2, Hyder Garden 2nd Street, Otteri ,***
***Chennai – 600012***

***www.amnatrust.org***

**Contact Us**:

*Email: write2amnatrust@gmail.com*

*YouTube Channel: https://youtube.com/c/amnatrust/*

*Facebook Page: https://www.facebook.com/amnatrust/*

***பின்குறிப்பு***: *இம்மின்னணுச்சஞ்ஞிகையில் தவிர்க்க இயலாது வரும் சில தட்டச்சுப் பிழைகளை அங்கத்தினர்கள் பொறுத்து அதனைத் தங்கள் பிரதிகளில் திருத்தி படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். பிழைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சியை வெளியீட்டு குழு தொடர்ந்து மேற்கொள்ளும்.*

***The Editorial Team:***

*Shri. Sankar, Sivakasi*
*Shri. Vijayakumar, Sivakasi*
*Shri. Venkatesa Muthu, Chennai*
*Shri. Vadivelan, Chennai*
*Shri. Manimaran, Chennai*
*Shri. Thiyagarajan, Chennai*
*Shri. Chiranjeevi, Chennai*

*Issue 53 – Month: December 2025*